இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 26-09-2025

# எதற்காக இத்தனை துள்ளல்?

இரண்டு நாட்களுக்கு முன்பு வரை காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தது போலவும், நேற்றுதான் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது போலவும், காங்கிரஸ் ஆட்சியில் போடப்பட்ட அநியாய வரிகளை, பாசமிகு பா.ஜ.க. ஆட்சி ரத்து செய்ததைப் போலவும், துள்ளிக் குதிக்கும் காட்சிகள் அருவெறுப்பாக இருக்கின்றன.

**அறிவிக்கப்பட்ட ஜி.எஸ்.டி. குறைப்பு மாபெரும் சலுகை என்று பா.ஜ.க. நினைக்குமானால், அந்தச் சலுகையை எட்டாண்டுகளுக்கு முன்னால் பறித்த கொடுமைக்கும் பொறுப்பேற்க வேண்டியதும் பா.ஜ.க.தான். எட்டாண்டுகள் ஒருவரை சிறையில் வைத்துவிட்டு, விடுவித்த அன்று ‘விடுதலை செய்தவன் நான்தான்’ என்று விழாக் கொண்டாடும் பீற்றலைத்தான் இப்போது பா.ஜ.க. செய்து கொண்டு இருக்கிறது.**

பிரதமர் மோடியும், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனும் சொல்லும் கணக்கைப் பார்த்து சாதாரண மக்கள் மயக்கம் அடைந்துவிட்டார்கள். இன்னும் எழவில்லை.

‘பொருளாதாரத்தில் புதிய அத்தியாயம் இன்று தொடக்கம்’ என்று தலைப்புச் செய்தி போட்டு மகிழ்ந்துள்ளது ‘தினத்தந்தி’. பிரதமர் சொன்னதாக அந்தத் தலைப்பில் சொல்லப் பட்டுள்ளது என்ன தெரியுமா? ‘வருமான வரி விலக்கு, ஜி.எஸ்.டி. குறைப்பால் மக்களுக்கு இரண்டரை லட்சம் கோடி கிடைக்கும்’ என்கிறது. இரண்டரை லட்சம் கோடி என்றால் எத்தனை பூஜ்யம் என்று ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் தனது வீட்டு வாசலில் எழுதிப் பார்த்துக் கொள்ளலாம்.

இதுதான் மக்களுக்குக் கொடுத்துள்ள தீபாவளியாம். நவராத்திரியாம். சேமிப்புத் திருவிழாவாம். விடுதலையாம். சுதந்திரமாம். இந்திய விடுதலையை பிரிட்டிஷாரே ஆகஸ்ட் 15 கொண்டாடுவதைப் போல அல்லவா இருக்கிறது!

**இப்போது வழங்கப்பட்ட சலுகைகளால் இந்திய நாட்டு மக்கள் 2.5 லட்சம் கோடி ரூபாய் சேமிக்க முடியும் என்று கணக்குப் போட்டுள்ளார் பிரதமர். 148 கோடி மக்களுக்கும் தங்களது வங்கிக் கணக்கில் மோடி எவ்வளவு போடுவார் என்று காத்திருக்கிறார்கள். ஏற்கனவே 15 லட்சம் வந்துவிட்டது. அத்தோடு சேர்த்து இதனையும் சேமித்து வைத்துக் கொள்வார்கள்.**

2017ஆம்ஆண்டுமுதல்மக்களதுபணத்தைஎவ்வளவுசுரண்டினார்கள் என்பது இப்போது சொல்லப்படவில்லை. சொன்னால் அந்தப் பணத்தை திருப்பித் தர வேண்டும். வட்டி போட்டு திருப்பித் தரத் தயாராக இருக்கிறார்களா? இருப்பார்களா?

**“பா.ஜ.க. அரசாங்கம் ஒன்பது தனித்தனி அடுக்குகளைக் கொண்ட ‘கப்பர் சிங்’ வரியைப் போட்டது. கடந்த 8 ஆண்டுகளில் 55 லட்சம் கோடிக்கு மேல் வரியை வசூலித்துள்ளது. இப்போது 2.5 லட்சம் கோடி சேமிப்பைப் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். பெரிய காயங்களை ஏற்படுத்திவிட்டு சின்ன பேண்ட் எய்டு போடுகிறீர்களா?” என்று கேட்டுள்ளார் காங்கிரஸ் தலைவர் கார்கே.**

55 லட்சம் கோடி எங்கே இருக்கிறது? 2.5 லட்சம் கோடி எங்கே இருக்கிறது?

இதில் என்ன கொடுமை என்றால், 2017 ஆம் ஆண்டு அநியாய வரி போட்டார் அல்லவா மோடி. அதையும், ‘புதிய வரலாறு தொடங்கப்பட்டது’ என்றுதான் இப்போதும் மோடி சொல்லி இருக்கிறார். இரண்டு நாட்களுக்கு முன்னர் ஆற்றிய உரையிலும், “2017 ஆம் ஆண்டு ஜி.எஸ்.டி. அமலாக்கத்தின் மூலம் புதிய வரலாறு தொடங்கப்பட்டது. இது ஒரே நாடு - ஒரே வரி என்ற கனவை நனவாக்கியது. சிக்கலான பல்வேறு வரிகளால் தொழில் துறையினர், நுகர்வோர் எதிர்கொண்ட இடர்ப்பாடுகளுக்குத் தீர்வு அளித்தது” என்று சொல்லி இருக்கிறார். இப்போது குறைக்கப்பட்டதையும், “நாட்டின் வளர்ச்சி வேகம் பெறும். தொழில் புரிவதை எளிதாக்கி முதலீடுகளை மேலும் ஈர்க்கும்” என்று சொல்லி இருக்கிறார் பிரதமர்.

**அது எப்படி, வரி போட்டாலும் நாடு வளரும்? வரியைக் குறைத்தாலும் நாடு வளரும்? செய்வது மோடியாக இருந்தால், அப்படித்தான். எதையும் செய்து விட்டு, ‘நாடு வளரும்’ என்று சொல்லி விட்டால் போதும், நாடு வளர்ந்து விடும். அத்தகைய மந்திர சக்தியை உதட்டில் வைத்துள்ளார் அவர்.**

“ஜி.எஸ்.டி. சலுகைகளை நுகர்வோருக்கு முழுமையாக வழங்காதவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். முறைகேட்டில் ஈடுபடும் நிறுவனங்களைக் கண்காணிக்கிறோம்” என்று ஒன்றிய நுகர்வோர் விவகாரத் துறைச் செயலாளர் நிதிகரே எச்சரிக்கை செய்துள்ளார். இந்தச் சூழ்நிலை எதனால் வருகிறது? இவர்கள் வழங்கியதாகச் சொல்லும் சலுகை குறைவு. அந்தச் சலுகையும் நுகர்வோருக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை என்பதுதானே இந்த எச்சரிக்கையின் பின்னணியாக இருக்க முடியும்?

மாநிலங்களின் நிதி உரிமையை, வரி உரிமையைப் பறித்தது தான் ஜி.எஸ்.டி.யின் முதல் மோசடி. அதனை முதலில் சரி செய்யுங்கள். மாநிலங்களுக்கு இழப்பீடு தாருங்கள். அதை விட்டு விட்டு, ‘தற்சார்பு இந்தியா, சுதேசி பிரச்சாரத்துக்கு மாநிலங்கள் உறுதியுடன் ஆதரவளிக்க வேண்டும்’ என்று சொல்வது எல்லாம் மகா நடிப்பு ஆகும். மாநிலங்கள் தற்சார்புடன் இயங்க வேண்டாமா? மாநிலங்கள், ஒன்றியத்திடம் கையேந்தி நிற்க வேண்டுமா? மற்ற மாநிலங்களை எதிர்பார்த்துக் கிடக்க வேண்டுமா?

**அரிசிக்கு 5 விழுக்காடு ஜி.எஸ்.டி. போட்டதை விடக் கொடுமை வேண்டுமா? அதனை நீக்க வேண்டும் என்று நிர்மலா சீதாராமனைச் சந்தித்து கோரிக்கை வைத்தார்களே வர்த்தகர்கள். அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டதா? சாப்பாட்டில் கை வைத்துவிட்டு, ‘ஏசி விலை குறைகிறது’ என்று சொல்லும் ஒன்றிய அரசுக்கு என்ன பெயர் வைக்கலாம்.**

நடுத்தர மக்களது ஒரே கோரிக்கை பெட்ரோல், டீசல் விலை உயர்வு. அதைக் கண்டு கொள்ளாமல், சுதேசிப் பெருமிதங்கள் எதற்காக? டிரம்ப் சொல்வதற்கு எல்லாம் மவுனமாக இருந்தால் இறுதியில் ‘சுதேசி’யாக அதுவே போய் முடிந்துவிடத்தான் செய்யும்!

கோவையில் ஒரு கடைக்குச் சென்று, ‘மைசூர்பாகு விலை குறைந்துள்ளதா?’ என்று கேட்கிறார் பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன். மக்களது காலை உணவு மைசூர்பாவா? மோடிக்கு ஏற்ற தொண்டர்கள்!! சபாஷ்!!



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தான் செல்லும் இடங்களில் தனக்கு வழங்கப்பட்ட புத்தகங்களை திருவள்ளூர் மேற்கு மாவட்டம் – திருத்தணி மற்றும் திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் நூலகங்களுக்கு 2000 புத்தகங்களை வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், சந்திரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். உடன் கழக பொதுச் செயலாளரும், அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளர் டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு மற்றும் அமைச்சர், தலைமைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ‘உலக சாம்பியன்ஷிப் ஸ்பீட் ஸ்கேட்டிங்’ போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்தியாவின் முதல் வீரர்

# தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆனந்த்குமார் வேல்குமார் துணை முதல்வரிடம் வாழ்த்துப் பெற்றார்!

**சென்னை, செப். 26-**

**உலக சாம்பியன்ஷிப் ஸ்பீட் ஸ்கேட்டிங் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற இந்தியாவின் முதல் வீரர் என்ற வரலாற்றை படைத்த தமிழ்நாட்டின் ஸ்கேட்டிங் வீரர் ஆனந்த்குமார் வேல்குமார், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.**




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை உலக சாம்பியன்ஷிப் ஸ்பீட் ஸ்கேட்டிங் போட்டியில் 2 தங்கப் பதக்கங்கள் மற்றும் 1 வெண்கலப் பதங்கம் வென்ற தமிழ்நாட்டின் ஸ்கேட்டிங் வீரர் ஆனந்த்குமார் வேல்குமார் நேற்று (25.9.2025) சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றது. தமிழ்நாடு முதலமைச்சர் விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளவும், வெளிநாடுகளுக்கு சென்று பயிற்சி பெறவும், அதிநவீன உயர்தர விளையாட்டு உபகரணங்களை வாங்கவும், தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை உருவாக்கி நிதியுதவி அளித்து வருகின்றார்.

மேலும், சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையை வழங்கி வருகின்றார்.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித் தொகை (Elite) திட்டத்தின்கீழ் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை 25 இலட்சம் ரூபாயை 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தியதோடு இத்திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை முதலமைச்சர் அமைச்சர் அவர்கள் 12 லிருந்து 25என இரட்டிப்பாக உயர்த்தியுள்ளார்.

மேலும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் பெறுவதற்கான ஊக்குவிப்பு (MIMS) திட்டத்தின் கீழ் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்து நிதியுதவியை 10 இலட்சம் ரூபாயிலிருந்து இருந்து 12 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கி வருகின்றார்.

MIMS திட்டத்தின் கீழ் பயன் பெற்று வரும் ஸ்கேட்டிங் வீரர் வீரர் ஆனந்த்குமார் வேல்குமார் சீனாவின் பெய்டைஹேயில் செப்டம்பர் 13 முதல் 21 வரை நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் ஸ்பீட் ஸ்கேட்டிங் போட்டியில் பங்கேற்றார்.

ஸ்பீட் ஸ்கேட்டிங் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் இத்தாலி, தென் கொரியா மற்றும் கொலம்பியா உள்ளிட்ட ஒரு சில நாடுகளின் வீரர்கள் மட்டுமே பாரம்பரியமாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இந்நிலையில் ஆனந்த்குமார் வேல்குமார் இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தைப் வென்று வரலாறு படைத்தார்.

சீனாவின் பெய்டைஹேயில் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் ஸ்பீட் ஸ்கேட்டிங்கில் உலகின் 47 முன்னணி வீரர்கள் பங்கேற்ற ஆடவருக்கான 1,000 மீட்டர் ஸ்பிரிண்ட் போட்டியில் தமிழ்நாட்டின் ஆனந்த் குமார் வேல்குமார் இலக்கை 1.24.924 என்ற சாதனை நேரத்தில் முதலிடம் பிடித்து தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்.

மேலும், உலகின் 159 முன்னணி வீரர்கள் பங்கேற்ற ஆண்களுக்கான 42.195 கி.மீ. மாரத்தான் போட்டியில் 58.29.747 என்ற சாதனை நேரத்தில் முதலாவதாக வந்து வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார்.

தொடர்ந்து ஸ்பீட் ஸ்கேட்டிங் உலக சாம்பியன்ஷிப் தொடரில் உலகின் 39 முன்னணி வீரர்கள் பங்கேற்ற 500 மீட்டர் ஸ்பிரிண்ட் போட்டியில் இலக்கை 43.072 வினாடிகளில் கடந்து மூன்றாம் இடத்தை பிடித்து வெண்கல பதக்கத்தையும் வென்றார்.

உலக சாம்பியன்ஷிப் ஸ்பீட் ஸ்கேட்டிங் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற இந்தியாவின் முதல் வீரர் என்ற வரலாற்றை படைத்ததுடன் 2 தங்கப் பதக்கங்கள் மற்றும் 1 வெண்கலப் பதங்கம் வென்ற தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் பெறுவதற்கான ஊக்குவிப்பு திட்ட வீரர் ஆனந்த்குமார் வேல்குமார், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (25.9.2025) சந்தித்து விளையாட்டுகளில் வென்ற பதக்கங்களை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஸ்கேட்டிங் வீரரின் பெற்றோர் மற்றும் பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டுப் பகுதியில் உள்ள

# இந்தியாவின் முதல் கடற்பசுப் பாதுகாப்பகத்துக்கு உலகளாவிய அங்கீகாரம் !

## ‘திராவிட மாடல்’ அரசின் சாதனை என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

*சென்னை, செப்.26-*

*‘திராவிட மாடல்’ அரசு அறிவித்த இந்தியாவின் முதல் கடற்பசுப் பாதுகாப்பகத்துக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைத்துள்ளதாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் தெரிவித்துள்ளார்.*



*அழிந்துவரும் நிலையில் உள்ள மிக அரிதான கடற்பசு இனத்தையும், அதன் கடல் வாழ்விடங்களையும் பாதுகாக்கும் பொருட்டு மன்னார் வளைகுடா, பாக்விரிகுடா பகுதியில் கடற்பசு பாதுகாப்பகம் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.*

*அதன்படி, 448 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளை உள்ளடக்கிய பாக். விரிகுடாவில் கடற்பசு பாதுகாப்பகம் அமைக்கப்படுகிறது.*

*இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில்தான் கடற்பசு பாதுகாப்பகம் அமைக்கப்படுகிறது.*

*இந்நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், திராவிட மாடல் அரசு அறிவித்த இந்தியாவின் முதல் கடற்பசுப் பாதுகாப்பகத்துக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைத்துள்ளதாக பெருமிதம் தெரிவித்துள்ளார். இந்த முன்னோடி முயற்சியைப் பாராட்டும் தீர்மானம் அபுதாபி IUCN World Conservation Congress முன் ஆன்லைன் வாக்கெடுப்பில் நிறைவேற்றப்பட்டது. இந்த முயற்சியில் பங்கேற்ற தமிழ்நாடு வனத்துறை, Omcar Foundation உள்ளிட்ட அனைவருக்கும் பாராட்டுகள் என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.*